**ஈரோடு மாவட்டம் - சித்தோடு பேரூராட்சி**

**ந.க.எண்.67/2022** **நாள் : 29.06.2022**

# கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022-23

## 1998ம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் தமிழ்நாடு சட்டம் 43/1998 விதிமுறைகளின் படி அறிவிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஈரோடு மாவட்டம், சித்தோடு பேரூராட்சி பகுதியில் கீழ்க்காணும் வேலைகளைச் செய்து முடிக்க தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் சித்தோடு பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **20.07.2022** ஆம் தேதி **புதன் கிழமை பிற்பகல் 3.00** மணி வரை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சித்தோடு பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் **இரண்டு உறை முறை**யில், மூடி முத்திரையிடப்பட்டு, மேல் உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப் பட்டிருக்கவேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 20.07.2022 ஆம் தேதி புதன் கிழமையன்று பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் "Technical Bid" திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தேவையான விபரங்கள் தகுதியாக இருந்தால் மட்டுமே "Price Bid" ஒப்பந்தப்புள்ளி உறை திறந்து பரிசீலிக்கப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 20.07.2022 தேதி பிற்பகல் 3.00 மணிவரை **http://www.tenders.tn.gov.in,** மற்றும் **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரிகளில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது பட்டியலில் கண்டுள்ள தொகைக்கான வங்கி வரைவோலை அல்லது வங்கி கொடு ஆணை சமர்ப்பித்து சித்தோடு பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை கணினி மூலமே பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து மின்னணு பரிவர்த்தனை மூலம் கையொப்பமிட்டு கணினி வழியாகவே அனுப்பலாம். அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்களை சித்தோடு பேரூராட்சி அலுவலகத்தில் நேரிடையாக 20.07.2022 ஆம் தேதி மாலை 3.00 மணிக்குள் ஒப்படைக்கலாம். ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் மற்றும் நிபந்தனைகள் குறித்தான விளக்கக்கூட்டம் 13.07.2022 ஆம் தேதி புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சித்தோடு பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சால்வன்சித் தொகை மற்றும் இதர பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## வேலைப் பட்டியல்

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ₹ லட்சத்தில் | முன் வைப்பு தொகை ₹ | ஷெட்யூல் படிவத் தொகை ₹ | ஒப்பந்ததாரரின் தகுதி | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சித்தோடு பேரூராட்சிக்கு சொந்தமான ரீ.ச.எண்.15/1, சத்தி மெயின் ரோட்டில் அமைந்துள்ள வாரச்சந்தையில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | **93.16** | **1,86,320** | **17,700** | Class I | **6** மாதங்கள் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.
2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தலாம்.
4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், சித்தோடு பேரூராட்சி என்ற முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.
5. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
6. ஒப்பந்தக்காரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விளக்கிக் கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.
7. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்று வேலை உத்திரவு வழங்கப்படும்.
8. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ₹ 100/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித் தர வேண்டும்.
9. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே பொறுப்பாவார்கள்.
10. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 9 பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரின் வைப்புத் தொகைகளும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்.
11. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.
12. சாலை வேலைகளை பொருத்த வரையில், கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகை பட்டுவாடா செய்யப்படமாட்டாது. பரத்தல் வேலையை நல்ல முறையில் செய்து வேலையை முழு அளவில் முடித்த பின்னர்தான் முழுத் தொகையும் பட்டுவாடா செய்ய இயலும்.
13. ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் மற்றும் தார் **(60/70** மற்றும் **Emulsion)** வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

14. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம்வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

15. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

16. வேலையை முடித்த பின்னர் கீழ்க்காணும் பட்டியல் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| வ.எண் | விபரம் | பிடித்தம் செய்யும் அளவு |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்புத்தொகை | 3% |
| 2 | வருமான வரி | 2% |
| 3 | மேல்வரி (வருமானவரி) | 10% |
| 4 | கல்வி வரி (வருமானவரி மேல்வரி) | 3% |
| 5 | GST | உரிய விகித அடிப்படையில் |
| 6 | நிறுத்தி வைக்கப்படும் தொகை | 5% |
| 7 | கட்டுமான தொழிலாளர் நல நிதி | 1% |

17. நிறுத்தி வைக்கப்படும் தொகை தார்சாலைகளுக்கு ஒரு வருடத்திற்கு பின்னர் திருப்பி வழங்கப்படும். வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.
18. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத்தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணபத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

19. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதும், பணி முடிந்த பின்னரும் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே இடத்தை சுட்டிக்காட்டும் படியாக புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.

20. வேலை நடைபெறும் இடத்தில் பணிகள் குறித்த விபரங்கள்அடங்கிய விளம்பரப்பலகை நிறுவப்படுதல் வேண்டும்.

21. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகள் முடிக்க வேண்டும்.

22. **E-Tender** மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

23. மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவீதத் தொகையில் வங்கி உத்திரவாதச் சான்று இணைக்க வேண்டும் அல்லது கூடுதல் காப்புத் தொகையினை ரொக்கமாக இவ்வலுவலகத்தில் செலுத்திய பிறகு வேலையை ஆரம்பிக்க வேண்டும்.
24. வேலைகள் சம்பந்தமாக அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.
25. ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்ததாரரால் தவிர்க்கப்படல் வேண்டும்.
26. இத்திட்டச்சாலைப்பணி முடிக்கப்பட்டவுடன், மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு இப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை, இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைக்க வேண்டும்.
27. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தார் சாலை பணிகள் பேவர் இயந்திரம் மூலம் அமைக்கப்பட வேண்டும்.

28. தேவைப்படும் பட்சத்தில் தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியத்திடம் தடையின்மைச் சான்று பெறப்பட வேண்டும்.

29. வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற 3 தினங்களுக்குள் ஒவ்வொரு வேலைக்கும் ₹ 100/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் சம்பந்தப்பட்ட வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் M.D.S.S மற்றும் S.S.R.T. ன்படி திருப்திகரமாக செய்து முடிக்கும் பொருட்டு செயல் அலுவலரிடம் உரிய படிவத்தில் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்கவேண்டியது. தவறினால் வேலை உத்திரவு ரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

30. Engineering Manual படி ஒரு பொறியியல் பட்டம் கட்டிட பொறியியலில் தேர்ச்சி பெற்ற பொறியாளரை பணி துவங்கி முடிக்கும் நாள் முடிய இப்பணிக்கு ஈடுபடுத்தப்பட்டு மதிப்பீட்டு தொகைக்கு உட்பட்டு பணியினை முழுமையாக முடித்து பயனீட்டிற்கு விட ஈடுபடுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரரிடம் மாதம் ஒன்றுக்கு ₹3,000/– பிடித்தம் செய்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்படும்.

31. Engineering Manual படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for slow progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்படும்.

32. ஒப்பந்தப்புள்ளி பெறும் போது முன் வைப்பு தொகை, மதிப்பீட்டுத் தொகையில் 1%ம், வேலை உத்திரவு பெறப்படுவதற்கு முன்னர் மீதமுள்ள 1% தொகையும் பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்படும். ஒவ்வொரு பகுதி பட்டியலிலும் 5% With held Amount பிடித்தம் செய்யப்படும். இறுதிப்பட்டியல் பொறுப்பாளரிடம் பணி முடிவறிக்கை (Completion Report) ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இறுதிப்பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கபடும்.

33. பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட 5% பணி காப்பீடு தொகை, கட்டிடப் பணிகளுக்கும் சாலைப் பணிகளுக்கும் ஒரு வருடம் முடிந்த பின்னர் பணியின் சரித் தன்மையை பொறியாளர்கள் ஆய்வு செய்து அறிக்கை பெற்ற பின்பு காப்பீடு தொகை திரும்ப வழங்கப்படும்.

34. பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தினையும், அரசு தொழில் நுட்பக்கல்லூரியில் ஆய்வு செய்து, அதன் விபரத்தினை அலுவலகத்திற்கு வழங்க வேண்டும்.

35. இப்பணிக்கு தேவைப்படும் தண்ணீரை ஒப்பந்ததாரரே தனது சொந்த பொறுப்பில் சேகரித்துக் கொள்ளவேண்டும். பொதுக் குழாய்களிலிருந்து தண்ணீர் பிடிக்கக் கூடாது.

36. இத்திட்ட கட்டிடப்பணி/ சாலைப்பணி முடிக்கப்பட்டவுடன் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு இப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைத்துக்கொடுக்கப்பட வேண்டும்.

37. மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் பொழுது, ஒவ்வொரு நிலையிலும் பணியின் தரம் உறுதி செய்யப்படும்.

## சிறப்பு நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். டேவணித் தொகை முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் தகுதிச் சான்றிதழ் (**Class I**), நிதி நிலை அறிக்கை, விற்பனை வரிச் சான்றிதழ் போன்ற விவரங்களை ஒரு உறையில் வைத்து, உறையின் வெளிப்புறத்தில் "**Technical Bid**" என்று குறிப்பிடப்பட வேண்டும். மற்றொரு உறையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் படிவம் வைத்து அவ்வுறையின் வெளிப்புறத்தில் "**Price Bid**" என்று குறிப்பிடப்பட வேண்டும். இவ்விரண்டு உறைகளையும் மூடி முத்திரையிட்டு மற்றொரு பெரிய உறையில் போட்டு அதனையும் மூடி முத்திரையிட்டு அவ்வுறையின் மேல் வேலையின் பெயர், மதிப்பீடு, ஒப்பந்தப்புள்ளி நாள், ஒப்பந்ததாரர் பெயர் போன்ற விபரங்கள் தெளிவாக எழுதப்பட வேண்டும். இதில் முதலில் "Technical Bid" என்று குறிப்பிட்டுள்ள உறை பிரிக்கப்பட்டு, அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தேவையான விவரங்கள் தகுதியாக இருந்தால் மட்டுமே "Price Bid" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டாவது உறை திறக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி தகுதியானதாக இல்லையெனில் "Price Bid" உறை திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

2. "Technical Bid" உறையில் வைக்கப்பட வேண்டியவை
   1. ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்துவதில் 5 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் என்பதற்கான சான்று
   2. ஒப்பந்ததாரர்கள் கடந்த 5 ஆண்டுகளில் பணிமேற்கொண்டதற்கான வருமானவரித்துறை சான்று மற்றும் தணிக்கையாளர் (Charted Accountant) அறிக்கை இணைக்கப்படவேண்டும்.
   3. ஒப்பந்ததாரர்கள் கடந்த 3 ஆண்டுகளில் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்தியதில், தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 50% சதவீதத்திற்கு மேல் ஒரே பணியில் செயல்படுத்தியமைக்கான சான்று
   4. ஒப்பந்ததாரர்கள் கடந்த 3 ஆண்டுகளில் தொடர்ச்சியாக செயல்படுத்திய வேலைகளுக்கான மதிப்பு ஒவ்வொரு வருடமும் தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 50% சதவீதத்திற்கு அதிகமாக உள்ளது என்பதற்கான சான்று.
   5. ஒப்பந்ததாரர் தற்போது கோரும் ஒப்பந்தப் பணிக்கான மதிப்புத் தொகையில் 15% சதவீதத்திற்கு அதிகமான தொகையை வங்கி இருப்பாக வைத்துள்ளமைக்கான வங்கி பாஸ் புத்தக நகல் அல்லது வங்கி மேலாளர் சான்று.

6. கட்டிடப் பணி, சாலை பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தருபவர்கள் அந்தந்த பணிகளுக்கு தேவையான கீழ்க்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் சொந்தமாக உள்ளமைக்கான சான்றுகள் இணைக்க வேண்டும். அல்லது கீழ்க்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் உரிமையாளர்களிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்பந்த நகலினை இணைக்க வேண்டும். மேலும், உரிமையாளர்களின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான R.C. புக் போன்ற ஆவணங்களின் நகல்களை இணைக்க வேண்டும்.

| Sl. No. | Name of the Equipment | Quantity |
|---|---|---|
| | **For BT Roads** | |
| 1 | Central Mixing Plant | 1 Nos |
| 2 | Paver Machine | 1 No. |
| 3 | Water Lorry | 2 No. |
| 4 | Tipper Lorry | 4 Nos. |
| 5 | Vibrator Roller | 1 No. |
| 6 | Vehicle mounted Mechanical Sprayer | 1 No. |
| 7 | Static Roller | 1 No. |
| | **For CC works** | |
| 1 | Concrete Mixers | 3 Nos |
| | (or) | |
| | Mobile Batching Plant | 1 No. |
| 2 | Screed Vibrator | 2 Nos. |
| 3 | Water Lorry | 1 No. |

7. ஒப்பந்ததாரர்கள் விற்பனை வரி செலுத்தியமைக்கான (Latest Tin Return) சான்று இணைக்கப்பட வேண்டும்.
8. மேற்காணும் சான்றுகள் அனைத்தும் Notary Public Officers அல்லது செயற்பொறியாளர் பணியிடத்திற்கு குறையாத உயர் அலுவலர்களால் சான்றொப்பம் பெறப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
9. ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டமைக்கு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த ஆவணங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து இட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

செயல் அலுவலர்,
சித்தோடு பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்

<u>பெறுதல்</u>

பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள், சித்தோடு பேரூராட்சி.

<u>நகல்:</u>

1. பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
2. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. கண்காணிப்பு பொறியாளர், (பேரூராட்சிகள்) சென்னை அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) கோவை அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
6. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) ஈரோடுமாவட்டம் அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
7. தொகுதி இளநிலை பொறியாளர், சித்தோடு பேரூராட்சி.
8. செயல் அலுவலர், பேரூராட்சிகள், பள்ளபாளையம், நசியனூர், கருமாண்டிசெல்லிபாளையம், காஞ்சிக்கோவில், பெருந்துறை பேரூராட்சிகளில் விளம்பரப்பலகைக்கு ஒட்டி விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது
9. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஈரோடு விளம்பரப்பலகைக்கு.
10. அலுவலக விளம்பரப்பலகைக்கு.
11. தலைவர் அவர்கள் மேசைக்கு